# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35, வ.ஆ.2007, சித்திரை 30, ஐ.அவ்வல்11,(12-5-76) புதன் புத்தகம் 30, இதழ் 6


## 'தமிழர் கூட்டணி'—'தமிழர் விடுதலை முன்னணி' ஆகுமா?

தமிழர் கூட்டணியின் பெயரை, கூட்டணி ஏற்றுக் கொண்டிருக்கிற இனவிடுதலை இலட்சியம் தொனிக்கிற முறையில் — 'தமிழர் விடுதலை முன்னணி' (Tamils Liberation front) என்று மாற்றவேண்டும் என்ற பிரேரணையொன்றும் கூட்டணியின் மாநாட்டுக்கு ஆலோசனைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

## தமிழர் கூட்டணிக்கு ஒரு ரூபா வழங்குவீர்!

"மே 14, 15ம் நாட்களில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் நடைபெறும் தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டுக்கு வரும் ஒவ்வொருவரையும் கூட்டணி நிதிக்கு ஆகக் குறைந்தது ஒரு ரூபா நன்கொடையாக வழங்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். மாநாட்டு மேடையில் வைக்கப்பட்டிருக்கும் உண்டியலில் தங்கள் நன்கொடைப் பணத்தை தாமாகவே ஒவ்வொருவரும் போட்டு தமிழர் கூட்டணியின் நிதியை பெருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்!"

—இவ்வாறு தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் கூட்டணி ஆதரவாளர்களான தமிழ்ப் பொதுமக்களை கேட்டுக்கொள்கிறார்.

# தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நாளை மறுதினம் ஆரம்பம்!

தமிழ் தேசிய இனத்தின் அரசியல் வரலாற்றில் வேகமான பல புதிய திருப்பங்களை ஏற்படுத்தவிருக்கும் தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நாளை மறு தினம் (மே 14 வெள்ளிக்கிழமை) வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகம் என்னுமிடத்தில் ஆரம்பமாகிறது. இம்மாநாட்டில் எடுக்கப்படவிருக்கும் முடிவுகளை அறிவதில் உலகெங்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்களும், ஏனைய உலக நாடுகளும் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்த மாநாடு தமிழர் கூட்டணி வரலாற்றிலும் ஒரு திருப்பு முனையாக அமையுமென்றும், கூட்டணி நடவடிக்கைக் குழுவில் இளைஞர்களுக்கே அதிக இடமளிக்கப்படுமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

விஷயாலோசனைக்கூட்டம் அரசியல் மாநாடு, இளைஞர் மாநாடு, மகளிர் மாநாடு பொதுக்கூட்டம் எனும் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகள் இத்தேசிய மாநாட்டின் போது இடம் பெறுகின்றன; அத்துடன் இயக்கக்கருத்துக்களைப் பரப்பும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

—4-ம் பக்கம் பார்க்க

## மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு உண்டி, உறையுள் ஏற்பாடுகள் பூர்த்தி!

தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டிற் கலந்துகொள்வதற்காக நாடு முழுவதிலுமிருந்து வட்டுக்கோட்டை நோக்கி வாழும் முன்னூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் தங்குவதற்கும், அவர்களது உணவுக்கும் மாநாட்டு வரவேற்புக்குழுவினர் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்.

மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்கு பல தனியார் குடும்பங்களும் தங்கள் வீடுகளைக்கொடுக்க முன்வந்துள்ளன.

## எங்கும் உதயசூரியன் கொடிகள் வரவேற்புவளைவுகள், பதாகைகள்

தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நடை பெறுவதையொட்டி, வட்டுக்கோட்டைத் தொகுதி முழுவதும் உதயசூரியன் கொடிகளாலும், வரவேற்பு வளைவுகள், மகர தோரணங்கள், வாழைகள், போன்றவற்றினாலும் அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மாநாடு நடைபெறவிருக்கும் சுழிபுரம், பண்ணாகம், வழக்கம்பரை பகுதிகள் எங்கும் எழிலுற அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தாங்களாகவே இப்பகுதியை அலங்கரிப்பதில் ஈடுபட்டுவருகின்றனர். மாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளை வரவேற்கும் பதாகைகள், வரவேற்பு வளைவுகள் நிறுவப்பட்டுவருகின்றன.

மறைந்த தலைவர்கள், தமிழ்த் தியாகிகளின் நினைவாக அவர்களது படங்களும் மாநாட்டு அரங்கில் வைக்கப்பட்டிருக்கும்.

தமிழர் கூட்டணியின் அரசியல் மாநாடு நடைபெறும் அரங்கிற்கு "தியாகிகள் அரங்கு" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.



## 'விடுதலை இயக்கத்தின் தளநாயகர் அமிர்தலிங்கமே!'

"வட்டுக்கோட்டையிலே தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டை நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டதற்கு காரணம் என்னவென்று சிலர் கேட்கிறார்கள். நான் அவர்களுக்கு சொல்லுவேன்—தமிழர் கூட்டணி நடத்தவிருக்கின்ற விடுதலைப் போராட்டத்துக்கு தலைமைதாங்கவிருப்பவர் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமாகவிருக்கும் நண்பர் அமிர்தலிங்கம் அவர்களே, எனவே தான் மாநாட்டை வட்டுக்கோட்டையிலே நடத்துகிறோம்!"

—உடுப்பிட்டி சிவா (யாழ் மேதினக் கூட்டத்தில் பேசியது)

## கைதாகும் தமிழ் தொழிலாளர் பிரச்சினை மீது தங்கத்துரை உடன் நடவடிக்கை

இந்தியக் குடியுரிமை பெற்றுக்கொண்டு வாசகால அனுமதிப்பத்திரத்தின் கீழ் இலங்கையில் வாழ்ந்துவரும் மலையகத் தமிழத்தொழிலாளர்கள் அந்த அனுமதிப் பத்திரம் முடிவடைந்தவுடன் திடீர் திடீரெனக் கைது செய்யப்பட்டு அவர்களது குடும்பத்திலிருந்து தனியே பிரிக்கப்பட்டு கும்பனித்தெரு தடுப்பு முகாமில் அடைக்கப்படுகிறார்கள் அல்லவா? அதிகாரிகளின் மனிதாபிமானமற்ற இச்செயலை நிறுத்தும்படி உத்தரவிடுமாறு பிரதமரிடம் மூதூர் இரண்டாவது பா. உ.வும், இலங்கைத்தொழிலாளர் கழகத் தலைவருமான திரு. அ. தங்கத்துரை கோரியிருக்கிறார்.

தொழிலாளர்கள் மீது [illegible]

இம் மிலேச்சனமான நடவடிக்கையை பிரதமரின் கவனத்துக்குகொண்டு வருவதற்காக அவரைச்சந்தித்த திரு. தங்கத்துரை, ஏற்கெனவே கைதுசெய்யப்பட்டு, குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டு, கும்பனித்தெரு தடுப்பு முகாமில் தனியே அடைபட்டிருக்கும் தொழிலாளர்களை விடுதலை செய்து, அவர்கள் மூன்று மாதங்களுக்கிடையில் இங்குள்ள சகலவேலைகளையும் முடித்துக்கொண்டு இந்தியா செல்ல பிரதமர் அனுமதிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்.

அத்துடன், மேற்சொன்ன [illegible] காட்டுமிராண்டித்தன

மாக தொழிலாளர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கையை கைவிடுமாறும் பிரதமரிடம் திரு. தங்கத்துரை கேட்டுக்கொண்டார்.

இவர்களது பிரச்சினையை கூடியவரை மனிதாபிமானத்துடன் அணுகுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடும்படி தாம் தமது நிரந்தரச் செயலாளருக்கு அறிவிப்பதாக பிரதமர் திரு. தங்கத்துரைக்கு வாக்களித்தார்.

அண்மையில், உடப்புசல்லாவை, ருகேலப்பகுதியில் சுமார் 75 பேர் கைது செய்யப்பட்டு கும்பனித்தெரு

—4-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட குடியேற்றத்தினால் தமிழர் நிலமிழந்தனர்!

## வேலைவாய்ப்பிலும் காலைவாரிவிடப்பட்டனர்!

மிக நீண்ட காலமாகத் தாங்கள் அனுபவித்து வந்ததும், தங்களின் பிரதான ஒரேயொரு தொழிற்றுறை முயற்சியாகவும் விளங்கி வந்த அரசாங்க சேவையில் இருந்து மெல்ல, மெல்ல அகற்றப்படுகிறோம் என்ற உணர்வுகள் தமிழர்கள் மத்தியில் எழத்தொடங்கின. கொழும்பு தவிர, மலேசியா போன்ற இடங்களிலும் பெரும்பாலான படித்த தமிழர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்று வந்தார்கள். இந்த வாய்ப்புக்கள் இப்போது நிறுத்தப்பட்டு விட்டன.

இலங்கை சுதந்திரமடைந்த சமயத்தில் ஏறக்குறைய 30வீதமான அரசாங்க உத்தியோக வாய்ப்புக்களைத் தமக்கெனக் கொண்டிருந்த தமிழர்களின் தொகை இன்று 6வீதத்துக்கும் கீழே குறைந்துவிட்டது. 1973ம் ஆண்டு இலங்கை நிர்வாகசேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 100 பேரில் நான்கே நான்கு தமிழர்கள் மட்டுமே இடம்பெற்றனர். இருவர் முஸ்லிம்கள். ஏனைய யாவரும் சிங்களவர்கள்.

தமிழ் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் பெருமளவில் வீழ்ச்சியுறத்தொடங்கியது. திரு. நேசையா அவர்களின் கூற்றின்படி 1971ம் ஆண்டுக்கும், 1974ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 23,000 ஆசிரியர்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன. இவர்களில் 18000 பேர் சிங்களவர்கள். 1867 பேர் தமிழர் 2507பேர் முஸ்லிம்கள். இதே காலப்பகுதியில் சேவையினின்றும் இளைப்பாறிய தமிழ் ஆசிரியர்களின் எண்ணிக்கையோ 3500 ஆகும். இதில் இருந்து தமிழ் ஆசிரியர்களின் தொகை கணிசமாகக் குறைக்கப் பட்டிருப்பதை உணரலாம்.

பொலிஸ் சேவையில் தமிழர்களின் விகிதாசாரம் இரண்டு அல்லது மூன்று வீதமாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இராணுவத்தைப் பொறுத்தமட்டில் இன்னும் பல சிரேஷ்ட தமிழ உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்ற போதிலும் இவர்கள் விட்டுச்செல்லும் இடங்களுக்கு புதிய தமிழர்கள் எவரும் நியமிக்கப்படுவதில்லை.

தமிழ் அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்கமான அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினரால் எடுக்கப்பட்ட கணக்கீடு ஒன்றில், அரசாங்க சேவைகளில் படிப்படியாக ஏற்பட்ட தமிழர்களின் விகிதாசார வீழ்ச்சி பற்றிப் பின் வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

| | 1956 வீதம் | 1965 வீதம் | 1970 வீதம் |
|---|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவை | 30 | 20 | 5 |
| எழுதுவினைஞர் சேவை (தபால் புகையிரத, ஆஸ்பத்திரி, சுங்க சேவைகளுட்பட) | 50 | 30 | 5 |
| உயர் தொழில்கள், (பொறி இயலாளர், வைத்தியர்கள், பேராசிரியர்கள்) | 60 | 30 | 10 |
| இராணுவம் | 40 | 20 | 1 |
| தொழிலாளர்கள் (Labour Forces) | 40 | 20 | 5 |

அனைத்துலகநீதிச்சபைக்கு முன்னால் இலங்கை தேசிய தமிழர் விவகாரச் சபையினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்று பின்வருமாறு நவில்கிறது, "சிங்கள மொழிமூலம் கல்வி கற்காத தமிழர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் தனியார் துறைகளில் புறக்கணிக்கப் படுகின்றன. அரசாங்கக் கட்டுப்பாடுகளுக்குள் இயங்கும் கூட்டுத்தாபனங்களில் நடைபெறும் ஆட்சேர்ப்புக்கள் யாவும் அமைச்சரின் தீர்மானப் படியே மேற்கொள்ளப்படுகின்றன. இவைகளுக்கென எவ்வித போட்டிப் பரீட்சைகளும் நடத்தப்படுவதில்லை. இத்தகைய கூட்டுத்தாபனங்களில் தமிழர்கள் வேலை பெறுதல் மிக, மிக அபூர்வம்."

### குடியேற்றங்கள்

தமிழர்கள் மிகப்பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களில் அரசாங்க ஒத்துழைப்புடன் திட்டமிட்டு நடைபெற்றுவரும் பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டங்களையிட்டு ஏற்படும் கலக்கமே, சிறுபான்மையினத்தவரின் பிரதான மனக்குறையாக இன்று விளங்குகிறது. ஐக்கியமாகச் செயல்படும் ஒரு நாட்டில் எந்தவொரு பிரதேசத்தையும், ஒரு குறிப்பிட்ட இன மக்கள் தமது சொந்தமெனப் பாராட்ட முற்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்ற கருத்துப்பட அரசாங்கத்தரப்பினர் தமது செயல்களுக்கு விளக்கம் கூற எத்தனிக்கின்றனர். ஆனால் தமிழர்களைப் பொறுத்தமட்டில் தம் சொந்த மண்ணில் வேண்டுமென்றே அன்னியர்கள் குடியேற்றப்படுவதின் மூலமாக, தனி இனம் என்ற ரீதியில் தங்களின் தனித்துவமும், உரிமையும் குறைந்து போவதாகவே கருதுகின்றனர். இதே நோக்கில் கவனிக்கும் போது, எந்தச் சிங்களப் பிரதேசத்திலாவது, அரசாங்க ஒத்துழைப்புடன் கூடிய தமிழர் குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டனவா? எனவும் தமிழ் மக்கள் சுட்டிக் காட்டிக்கேட்கின்றனர்.

இத்தகைய குடியேற்றத் திட்டங்கள் பற்றிய குறிப்புகள் இந்நாட்டில் செய்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு சமரச உடன்படிக்கையிலும் இடம்பெறவே செய்தன. பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தத்தில் கூட, குடியேற்றத்திட்டங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் உரிமை, ஸ்தாபிக்கப்படவிருக்கும் பிரதேசச் சபைகளுக்கே கையளிக்கப்பட வேண்டும். என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

ஐக்கிய முன்னணியினரால், அனைத்துலக நீதிச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றில், "கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற ஏராளமான குடியேற்றங்களால், அங்கிருந்து ஒரு சிங்களப் பிரதிநிதியொருவரைப் பாராளு மன்றத்துக்கு அனுப்பக் கூடிய வகையில் புதிய தேர்தல் தொகுதியொன்றை உருவாக்கக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதாக" குறிப்பிடப்பட்டிருக்கிறது. இலங்கைத் தேசிய தமிழர் விவகாரச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனம் ஒன்று கீழ்காணும் புள்ளி விபரங்களைத் தருகிறது.

தேர்தற்றொகுதிகள், மக்கட் தொகை, பிரதேச அடிப்படையிலேயே உருவாக்கப் பட்டு எல்லைகளும் தீர்மானிக்கப்பட்டன. இதன்படி 75,000 மக்களுக்கொரு

தற்கு! இது உதவியது. அனைத்துலக நீதிச் சபைக்கு, ஐக்கிய முன்னணியால் கையளிக்கப்பட்ட மனுவொன்றில் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படு

### விட்டர் ஐவன் அறிக்கை

தேர்தல் தொகுதி அல்லது ஒவ்வொரு 1,000 சதுர மைல் பரப்பளவுக்கும் ஒரு தேர்தல் தொகுதி என்ற அடிப்படையில் விதிகள் இயற்றப் பட்டன. இதுவும் தமிழர்

கிறது. "தற்போதைய பாராளுமன்றம் 151 தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. இவர்களில் 124 பேர் சிங்களவர்களாவர். 70%மான

| | தமிழர்கள் 1953 | தமிழர்கள் 1971 | சிங்களவர்கள் 1953 | சிங்களவர்கள் 1971 | தமிழ்ப்பிரதேசங்களில் அதிகரிக்கப்பட்ட சிங்களவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் :— | 477 304 | 673,043 | 6183 | 20,402 | 14,219 |
| மட்டக்களப்பு :— | 130,381 | 246,582 | 31 174 | 94,150 | 62,976 |
| திருகோணமலை :— | 37 517 | 73,255 | 15 296 | 55,308 | 40 192 |
| புத்தளம் :— | 9,010 | 30,994 | 31,587 | 309 298 | 277,711 |

### தேர்தல் தொகுதிகளைப் புனரமைத்தல்

முதன் முதலில் வரையப்பட்ட தொகுதி நிர்ணயச்

**(பகுதி-12)**

சட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்துடன்

களுக்கு மிகப்பாதகமான முறையிலேயே அமைந்திருந்தன: வாக்குரிமையற்ற பத்துலட்சத்துக்கு மேற்பட்ட இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கையும் தேர்தல் தொகுதிகளை நிர்ணயிக்கும் விதிகளின் கீழ் சேர்க்கப்பட்டிருந்ததால் ஏறக்குறைய பதின்மூன்று தேர்தல் தொகுதிகளில் இருந்து சிங்கள உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவ

சனத் தொகையை மாத்திரம் கொண்டுள்ள சிங்களவர்கள் பாராளுமன்றத்தில் 80%மான பிரதிநிதிகளைக் கொண்டுள்ளார்கள்: இவ்விதம், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பணயம் வைத்துப் பெரும்பான்மையினரின் பிரதிநிதித்துவத்தைப் பாராளுமன்றத்தில் அதிகரித்துள்ள ஒரே நாடு இந்த உலகில் இலங்கை மட்டுமே.

---

# தோட்டத்தொழிலாளருக்கு சேமலாப நிதி வழங்கப்படவில்லை!

## இலங்கை தொழிலாளர் கழகம் முறையிடுகிறது!

மஸ்கெலியாவைச் சேர்ந்த லக்கம், ரதமூட் ஆகிய இரு தோட்டங்களும் தற்பொழுது காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் பொறுப்பேற்று நடத்தடபடுகின்றது. ஆனால் கடந்த 1971 ஆண்டு முதல் 1976வரை இங்குள்ள பதிவு செய்யப்பட்ட 234 தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி, வருடாந்த போனஸ் ஆகியவை இதுவரை கொடுக்கப்படவில்லை.

இலங்கை—இந்திய உடன்படிக்கையின்படி இந்திய கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொண்ட சுமார் 100க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்களின் மேற்படி ஊதியம் இடைக்காத காரணத்தால் விசா முடிந்தும் தாயகம் திரும்பமுடியாத நிலையில் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். விசாமுடிந்தோர் எனிருபலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் மேற்படி ஊழியர் சேமலாப நிதி, வருடாந்த விடுமுறைப் பணம், சேவை காலப்பணம் ஆகியவை பெற்றுக்கொள்ள அனுமதி அவகாசம் கொடுத்து விடுதலைசெய்யப்பட்டார்கள்.

இது இப்படியிருக்க மேற்படி இருதோட்டங்களையும் காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க அரசு தீர்மானித்திருக்கின்றது. இதனால் அச்சமும், பீதியும் அடைந்த தொழிலாளர்கள் தாம் அங்கத்துவம் வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரதோட்டத் தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து—விலகி இலங்கைத்தொழிலாளர்கள் கழகத்தில் வந்து அங்கத்துவம் வகித்தனர்.

மேற்படி தொழிலாளர்களின் குறைகளை அறிந்த இலங்கைத்தொழிலாளர் கழக மஸ்கெலியா மாவட்டப் பிரதிநிதி திரு. நடராசமூர்த்தி தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய ஊழியர் சேமலாபநிதி, வருடாந்தபோனஸ், சேவை காலப்பணம் ஆகிய குறித்தும், அவர்களுக்கு பாதுகாப்புகேட்டும் தொழில் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

# உடுப்பிட்டிதொகுதி தமிழ் இளைஞர் பேரவை

## மத்திய குழு தெரிவு

தமிழ் இளைஞர்பேரவையின் மத்தியகுழு அமைப்புக் கூட்டம் (2-5-76) ஞாயிறு மாலை 5மணியளவில் மந்திகை அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பேரவையின் மத்திய குழுத் தலைவராக ந. தங்கராசா அவர்களும், செயலாளராக ச. செந்துராசா அவர்களும் பொருளாளராக மா. வீரவாகு அவர்களும் செயற்குழு உறுப்பினர்களாக க. சண்முகநாதன் க. கதிர்காமநாதன் ஆகியோர் ஏகமனதாகத்தெரிவுசெய்யப்பட்டனர்.

கூட்டத்தில் விசேட பேச்சாளராகக் கலந்துகொண்ட கொழும்பு த. இ. பேரவைத் தலைவர் இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்கள் உரையாற்றுகையில் "இளைஞர் பேரவை கூட்டணியின் ஆணைக்குட்பட்டு, கட்டுப்பாடாக இயங்கும் ஓர் இயக்கமாகவே இருக்கவேண்டும். கூட்டணி மாநாட்டில் பிரகடனம் செய்யப்படும் கொள்கைகளை அமுல்படுத்த முன்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விலங்கிடுங்கள் வீதியிலே இழுத்துச் செல்லுங்கள்!

## விரும்பியவாறெல்லாம் சித்திரவதை செய்யுங்கள்!

### எதையும் தாங்க எனது இதயம் தயார்!

### ஈ. வெ. கி. சம்பத்துக்கு கருணாநிதி பதில்!



"விலங்கிடுங்கள், வீதியிலே இழுத்துச் செல்லுங்கள்! விரும்பியவாறெல்லாம சித்திரவதை செய்யுங்கள் எதையும் தாங்கும் எனது இதயம் என்பதை மறவாதீர்கள!"

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. ஈ வே. கி. சம்பத்துக்கு திமுகழகத்தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி கூறியிருக்கிறா. அவர் எழுதியிருப்புதாவது:-

"நாகாக்க!" என்று நண்பர் சம்பத் எனக்கு அறிவுரையும் எச்சரிக்கையும் வழங்கியிருக்கிறார். அவர் விடுத்துள்ள அந்த அறிக்கையில் 'நாகாக்கும்' பண்பைக் கடைபிடிக்க முடியாத் நிலையில் அவர், மிகுந்த அடக்க சுபாவமுடைய என்னைப் பார்த்து 'நாகாக்க' என்று கூறியிருப்பது விந்தையான கதைதான்.

எனக்கு அடக்கம், இயல்பாகவே அமைந்த ஒன்று! கொதிப்படையத்தக்க சில சூழ்நிலைகளில் நான் சற்று உணர்ச்சிமிகப் பேச முனைந்தாலும்கூட அறிஞர் அண்ணாவிடத்தில் பெற்ற பயிற்சி, அந்த முனைப்பைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது.

மேன்மை மிகு பருவா அவர்கள், கழகத்தைப் புற்று நோய் என்றும், இருபது அடிக் குச்சியால்கூடக் கழகத்தினரைத் தொடக்கூச மாக இருக்கிறதென்றும் பேசியதற்கு நான் அளித்த அடக்கமான, ஆனல் விளக்கமான பதிலைப் பார்த்து சில எதிர்க்கட்சி ஏடுகள் கூட, "கருணாநிதியின் பணிவு" என்று கிண்டல் செய்து எழுதியதாகக் கேள்வி! ஆனல் நான் அடக்கமில்லாமல் எழுதுவதாகவும் பேசுவதாகவும் நண்பர் குற்றம் சாட்டுகிறார். அந்தக் குற்றச் சாட்டு அறிக்கையில் அவர் "நா காத்திடும் நாகரீகத்"தைச் சற்று கவனிக்கலாம்.

"கூண்டில் விலங்கிடாக் குற்றவாளி"

"சனியன்"

"வில்லன்"

"அருவருக்கத் தக்க குற்றச் சாட்டுக்கு ஆளானவர்"

இந்த அடைமொழிகள் எல்லாம் நண்பர் சம்பத் அவர்கள் எனக்குச் சூட்டியுள்ளவைகளாகும்.

இவைகளைவிட இன்னும் இழவு நிறைந்த வசை மாரிகளைக் கேட்டுப் பழகியவன் தான் நான்! என் குலம், கோத்திரம், குடும்பம்' பெண்டு பிள்ளைகள், அனைத்துமே எதிர்க்கட்சி மேடைகளில் விமர்சிக்கப்பட்டவை தான்! "வாழ்க வசவாளர்கள்!"என்று அண்ணு வாழ்த்தியதைப் போலத்தான் நான் அவர்களை வாழ்த்தியிருக்கிறேன். இப்போதும் என் பழைய நண்பரை அது போலவே வாழ்த்துகிறேன்.

நான் சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட பகுதியைச் சேர்ந்தவன்—மிக மிக மிகப் பிற்படுத்தப்பட்ட பகுதியைச் சேர்ந்தவன்—அதனல் அடக்கம், இயல்பாகவே இருந்து அண்ணு அவர்களால் நிலை பெற்றுவிட்ட ஒன்ருகிவிட்டது என்னிடம்!

அன்ெருரு நாள் தமிழ் நாட்டுப் பெரிய தலைவர் ஒருவரும் அவரது சகாக்களும் கள்ள நோட்டு தயாரிப்பதாக ஆயிரம்விளக்குக் கூட்டத்தில் பேசியவரும் இவர்தான்! நீதிமன்றத்தில் நான் அப்படிப் பேசவில்லை என்று வீரமாக 'டன்கர்க்' செய்தவரும் இவர்தான்! "நா காக்க!" என்று எனக்குச் சொல்லுகிருர்! காலம் மிகவும் கெட்டுத்தான்விட்டது!

"அடிமுட்டாள்" என்பதற்கு இனிமேல் அகராதியிலே புதிய சொல்லையே புகுத்தலாம்—அந்தச் சொல் தான் "கா..." என்று பொதுக் கூட்டங்களிலே ஒரு பெரிய தலைவரைப் பற்றிப் பேசி, அதனைக் கேள்வியுற்ற அண்ணு அவர்கள் மெத்தவும் வருந்தியதை அனைவரும் அறிவா! "நாகாக்க' என்று, இவர் எனக்கு உபதேசம் செய்கிருர்! உலகம் கெட்டுத்தான் போய்விட்டது!

"தம்பி! தம்பீ!" என்று அன்புத் தவழ அழைத்த அண்ணனை, ஒரே நொடியில் அவமதித்துவிட்டு, —"யார் இந்த அண்ணுத்துரை?" என்று மேடை போட்டுக் கேட்டார் இந்த மேதை! இவர்தான் 'நாகாக்க என்று எனக்கு அறிவுரை கூறுகிருர்! நான் யாரை நோவது?

கழகத்திலிருந்த போது காங்கிரஸ் தலைவர்களை நாகாக்காமல் தாக்கியவர்!

தனக்கொரு புதிய கட்சி தொடங்கியபோது கழகத் தலைவர்களை நாகாக்காமல் தாக்கியவர்!

கட்சியைக் கலைத்துவிட்டு காங்கிரசில் இணைந்து எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லோரையும் நாகாக்காமல் தாக்கியவர்!

காமராசரின் காங்கிரசில் இருந்துகொண்டு புதிய காங்கிரஸ் கட்சியின் மேலிடத் தலைவர்களை நாகாக்காமல் தாக்கியவர்!

புதிய காங்கிரசில் சேர்ந்து பழைய காங்கிரஸ் தலைவர்களை, நாகாக்காமல் தாக்கியவர்!

இப்போது இணைந்த காங்கிரசில் இருந்து கொண்டு, என்னை நாகாக்காமல் தாக்குகிறவர்!

இவர்தான் இதோபதேசம் செய்கிருர், "நாகாக்க" என்று!

"கூண்டில் விலங்கிடாக் குற்றவாளி" என்று குறைபட்டுக் கொள்கிருரே; பாபம்!

"அதையும் பூட்டி பார்த்துக் களிப்படையுங்களேன்!

கைக்கு விலங்கு மட்டு மல்ல; என் கழுத்துக்கு சுருக்குக் கயிறே வரினும் அது கண்டு நண்பர் சம்பத் போன்றவர்கள் மகிழ்வதை விட நான் அதிக மகிழ்ச்சி தான் அடைவேன்!

விலங்கிடுங்கள்! வீதியிலே இழுத்துச் செல்லுக்கள்! விரும்பியவாறே சித்திர வதை செய்யுங்கள்! எதையும் தாங்கும் இதயம் இந்த இதயம், என்பதை மட்டும் மறவாதீர்கள்" என்றுதான், நான் அவர்களுக்குக் கூறிக் கொள்வேன்.

சனியனும், வில்லனும், அருவருக்கத்தக்க குற்றங்களுக்கு ஆளானவனும் நான்!

வழக்கு ஜோடிக்கிருர் ஈரோட்டு இளவல்!

அருவருக்கத்தக்க குற்றங்களின் மொத்த உருவமாகக் காட்சியளிப்பவர்கள் யார் என்று மக்களுக்குத் தெரியும்! சம்பத்தைப் போன்றவர்கள் ஜோடிக்கும் வழக்கில் அவர்களே சிக்கிக் கொள்வார்கள்! எனவே ஜோடனை நில்லாது, செல்லாது, அது பொல்லாததும் கூட; முடிவில் ஜோடிப்பவர் மீதே பாய்ந்து விடும்! எனவே, 'நாகாக்க' வேண்டியது எனது பிரியமுள்ள பழைய நண்பர் சம்பத்தும், அவரைப்போன்ற வேறு சில பழைய நண்பர்களும் தான்!

அரசியலில் பழிவாங்கும் வரலாறுகள் பல வற்றைப் படித்தவன் நான்! என்னைப் போலவே என் நண்பரும் படித்திருக்கிருர் என்பது எனக்குத் தெரியும்!

யாரோ சொல்கிருர்களாம்; கழகத் தலைமையிலிருந்து நான் விலக வேண்டும் என்று! தன் கட்சி வேலையைக் கவனிக்காமல், அடுத்த கட்சிக்கு ஆலோசனை சொல்ல வருகிருர்!

இதைவிட நாகாக்கத் தெரியாத குணம், வேறு எதுவாக இருக்க முடியும்?

கழகத் தலைமையில் நான் இருப்பதும் விலகுவதும் நண்பர் சம்பந்தோ, அல்லது வேறு நாலுபேர்களோ கூடி முடிவுகட்டக் கூடிய விவகாரமல்ல!

இது நமது கழக விவகாரம்! நமது கழகப் பொதுக்குழு தீர்மானிக்க வேண்டிய விவகாரம்!

ஜனநாயக முடிவை ஏற்றுக்கொள்ள என்றைக்கும் தயாராயிருப்பவன் நான்!

இதில் சம்பத்துக்கு என்ன அக்கறை?

பாவம், ஏதோ எழுத வேண்டுமென்று எழுதியிருக்கிருர் ஒரு அறிக்கையை!

அவர் வீட்டு நிலைக் கண்ணடிக்கு முன்னல் நின்று அவர் திரும்பத் திரும்பக் கூறவேண்டிய வார்த்தை "நாகாக்க" என்பது!

---

# "தொழிலாளரின் சக்தியை ஒன்ருகத் திரட்டுவோம்!"

## தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணி தலைவர் செல்லத்தம்பு உறுதி!

"சமுதாயத்தில் தொழிலாளர்களின் சக்தி மகத்தானது. தொழிலாளர்கள் பங்குகொள்ளாமல் ஓர் இனம் விடுதலைப் போராட்டத்தில் வெற்றியடைந்ததாகவும்வரலாறு இல்லை. ஆகவே சிதறிக் கிடக்கும் தமிழ்த்தொழிலாள வர்க்கத்தை ஒரே அணியில் ஒன்று திரட்டுவதே நமது பணியாகும்"

இவ்வாறு தமிழ்த்தொழிற் சங்கக்கூட்டணியின் தலைவராகத்தெரிவுசெய்யப்பட்டுள்ள வவுனியா பா. உ., திரு. சே மா. செல்லத்தம்பு குறிப்பிட்டார்.

தமிழ்தொழிற் சங்கக் கூட்டணியின் ஆண்டுக்கூட்டம் சென்ற 5-5-76 புதன்கிழமை மாலை கொழும்பு சுரசுவதி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்க முட்பட 11 மொழிவழித் தொழிற்சங்கங்களின பிரதி நிதிகள் கலந்து கொண்டார்கள். திரு. செல்லத்தம்பு கூட்டணியின் தலைவராகவும், ஐ. தி. சம்பந்தன்செயலாளர் நாயகமாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாத்தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

கூட்டணியின் புதிய தலைவர் திரு. செல்லத்தம்பு கருத்துத்தெரிவிக்கையில், தமிழ் ஈழத்திலுள்ள அனைத்துக் கூட்டுத்தாபனங்களிலும் வேலைசெய்யும் [illegible] தொழிலாளர்கள், [illegible] ஊழியர்கள் போன்றோரை இணைத்த தமிழ்த் தொழிற்சங்கங்கள் உருவாக வேண்டுமென்றும், தமிழ் ஈழமடங்கிலும் சுமார் 20 000 தொழிலாளர்கள் இருப்பதாகவும், இவர்களை ஒன்றிணைத்து தமிழர் கூட்டணியின் வரலாற்றில் புதிய தொழிற்சங்க எழுச்சியை ஏற்படுத்தவேண்டுமென்றும், மாதர் அணி, இளைஞர் அணிபோல தொழிலாளர் அணியும் ஒரு சக்தியாக உருவாகவேண்டுமென்றும், அதற்காகவே தொழிற்சங்கக்கூட்டணி பாடுபடுமென்றும் தெரிவித்தார்.



---

## உடுப்பிட்டித்...

—2-ம் பக்கத் தொடர்

நின்று உழைக்கவேண்டும் என்று கூறினர்.

இறுதியில் நன்றி தெரிவித்து ச. செந்துராசா உரையாற்றுகையில் "விடுதலைப்போரில் இளைஞர்களின் பங்கு அதிமுக்கியம் வாய்ந்தது. எமது தொகுதி இளைஞர்கள் ஏனைய தொகுதி இளைஞர்களுக்கு எந்த வகையிலும சளைத்தவர்கள் அல்ல என்பதை நாம் எடுத்துக் காட்டிடவேண்டும். நாம் எந்த இலாபமும் கருதி அரசியலில் ஈடுபடக்கூடாது இதுவே நாம் இறைவனுக்குச் செய்யும் பெரிய தொண்டு என்ற எண்ணம் எம்மனதில் இருக்கவேண்டும். இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் ஆகையால் நாளையபொறுப்பினை உணர்ந்து இன்றேநாம் செயற்படத்தொடங்க வேண்டும்" என்று கூறினர். பீட்டர் பொன்கலனும் உரையாற்றினர்.

---

## ஆண்டறிக்கை தமிழில் வந்தது!

இலங்கை மத்திய வங்கியின் 1974-1975ம் ஆண்டு அறிக்கை இப்போது தமிழிலும் வெளிவந்துவிட்டது. இதன் விலை ரூபா 5 00, இலங்கை மத்திய வங்கியின் தகவல் பகுதியில் இதைப் பெற்றுக்கொள்ளலாம். அடுத்து இலங்கை மத்திய வங்கியினல்"பொருளாதார மீளாய்வு" எனும் நூலும்தமிழில் வெளியிடப்படவிருக்கிறது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

# தமிழ் இளைஞர் பேரவையும் தயார்!

## இளைஞர் மாநாட்டு ஏற்பாடுகள் பூர்த்தி!

மே 14, 15ம் திகதிகளில் வெகு விமரிசையாக நடக்கவிருக்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தமிழர் கூட்டணியின் முதலாவது மாநாட்டின்போது 15ம் திகதி பிற்பகல் 1-30 மணியளவில் தமிழ் இளைஞர் பேரவையின் மகாநாடு நடைபெற உள்ளது—இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இளைஞர் மாநாடு நடைபெறவிருக்கும் அரங்குக்கு "தியாகி சிவகுமாரன் அரங்கு" எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 13-5-76 வியாழன் காலை 9 மணிக்கு தமிழர் கூட்டணி தலைமை அலுவலகத்தில் [illegible] மத்திய கிளையின் தலைவர், செயலாளர், பொருளாளர் கொண்ட மத்திய குழு கூடி தமிழ் இளைஞர் பேரவைக்கென ஒரு நடவடிக்கைக் குழுவைத்தெரிவு செய்வர். அந்த நடவடிக்கைக் குழுவே தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவில் அங்கம் வகிக்கும் எனவும், தமிழ் இளைஞர்பேரவையின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி முடிவெடுக்குமெனவும் அறியப்படுகிறது. இக்கூட்டத்தில் திருவாளர்கள் அமிர்தலிங்கம் மு. சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

பல தொகுதிகளின் மத்திய கிளைகள் நிறுவப்பட்டு விட்டதாகவும், ஏனைய தொகுதிகளின் மத்திய கிளைகள் [illegible] கப்பட்டு விடுமென்றும் தெரியவருகிறது.

இந்த ஏற்பாடுகளில் தமிழ் இளைஞர் பேரவையின் தற்காலிக அமைப்பாளர்களான திரு ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், திரு. சு. மகேந்திரன், திரு. பீற்றர் பொன்கலன் ஆகியோரும் கொழும்புக் கிளையின் செயலாளர் மண்டூர் மகேந்திரனும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

"தமிழ் இளைஞர் பேரவையின் தலைவர் காசி ஆனந்தன், அமைப்புச்செயலாளர் மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், மன்னார் அமைப்பாளர் ஜெயராசா வட்டுக்கோட்டை அமைப்பாளர் சந்ததியார், மற்றும் சிவஜெயம், நடேசானந்தம், [illegible] போன்ற பல துடிப்பான தமிழ் இளைஞர் பேரவை வாலிபர்கள் எவ்வித நீதி விசாரணையுமின்றி சிறைச்சாலைகளுக்குள் அடைக்கப்பட்டிருப்பினும், இளைஞர் பேரவையினரின் சிறப்பு மகாநாடு அவர்களின் நல்லாசிகளுடன் வெற்றிகரமாக நடக்கும் "எனத் தாம் நம்புவதாகவும்," தேசிய மகாநாடு தமிழர் கூட்டணி மே 22 முதல் ஆரம்பிக்கவிருக்கும் சட்ட மறுப்பு இயக்கத்திற்கு தமிழ் இளைஞர்கள் தயார் என்பதைக் காட்டும் எழுச்சி மகாநாடாக அமையும் எனத் தாம் திடமாக நம்புவதாகவும் தமிழ் இளைஞர் பேரவைத் தற்காலிக அமைப்பாளர்களில் ஒருவரான திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் தெரிவித்தார்.

### கானமயிலும் வான்கோழியும்

"கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்து தன பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போல்—தமிழர் தந்தை செல்வாவுக்கு நாடெங்கனும் பிறந்த நாள் கொண்டாடுவதைக் கண்டு, மனம் புகைந்து வட்டுக்கோட்டை பா. உ. தியாகராஜா அவர்களும் தனக்குத்தானே விழா எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு மக்களின் எள்ளிநகையாடலுக்கு ஆளாகியுள்ளார். கானமயில் யார், வான்கோழி யார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். வான்கோழி என்றுமே கானமயிலாகமுடியாது. கல்லாதார் கற்றகவி என்றும் மக்கள் அவையில் எடுபடாது."

—அராலியில் ஈழவேந்தன் கூறியது.

## தோட்டதொழிலாளர் மீது அரசுநடத்தும் தாக்குதலுக்கு மே நாள் விழாவில் கண்டனத் தீர்மானம்!

மலையகத் தமிழ் சகோதரர்கள் மீது அரசு நடாத்தி வரும் கொடூரமான தாக்குதலுக்கு யாழ் கோட்டை மைதானத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்—தமிழர் கூட்டணி, மொழிவழித் தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் ஆதரவுடன் திரு. க. சோதிலிங்கம் (அ. எ. ச. தலைவர்) தலைமையில் நடாத்திய மே நாள் விழாவில் பகிரங்கமாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதுபற்றிய தீர்மானத்தை எழுதுவினைஞர் சங்கப்பொதுச்செயலாளர் திரு. இ பேரின்பநாயகம் முன்மொழிய அங்கு திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களும் கரகோஷம் செய்து தீர்மானத்தை ஒருமனதுடன் ஏற்றுக்கொண்டனர்.

அத்தீர்மானம் வருமாறு:-

தோட்டங்கள் தேசியமயமாக்கப்படுவது என்றபோர்வையில், மலையகத் தமிழ் தொழிலாளர்களைத் தோட்டங்களில் இருந்து விரட்டியடிப்பதையும், வேலை நீக்கம் செய்வதையும், அவர்களின் தொழிற்சங்க—அரசியல் உரிமைகளை மறுப்பதையும், மிலேச்சத்தனமான முறையில் கைது செய்து மிருகங்கள் போல் மூர்க்கத்தனமாகத் தாக்குவதையும் இந்த அரசின் ஏனைய படுபிற்போக்கு வாதமான—இனத்துவேஷச்செயல்களையும் நாம் பகிரங்கமாகக் கண்டிக்கின்றோம்."

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது தீர்மானம்:-

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்று குரல் எழுப்பும் இன்றைய [illegible] டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக தனித்துவத்துடன் நிலைத்த வாழ்வு வாழ்ந்துவரும் தமிழ் தொழிலாளர்களின் உரிமைகளைத் திட்டமிட்டுப்பறித்து வருவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்."

### கருணாநிதியின் சார்பாக சாந்திபூஷண்

கருணாநிதிக்கும் ஏனைய திமுக அமைச்சர்கள் சிலருக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள இலஞ்ச ஊழல் குற்றச் சாட்டுகளின் மீதான பூர்வாங்க விசாரணை 14-5-74 புதுடெல்லியில் தொடங்குகிறது. சர்க்காரியா கமிஷன் முன் நடைபெறும் இந்த விசாரணையில் கருணாநிதி சார்பில் இந்தியாவின் பிரபல சட்டமேதையான சாந்திபூஷண் ஆஜராகிறார். இந்திராகாந்திக்கு எதிராக தொடரப்பட்ட தேர்தல் வழக்கில், இந்திராகாந்திக்கு எதிராக ராஜ் நாராயண் சார்பில் ஆஜராகி வெற்றியீட்டிவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கைதாகும் தமிழ்...

—1-ம் பக்கத் தொடர்

தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

இப் பிரச்சினை தொடர்பாக இ. தொ. கழகபொதுச் செயலாளர் மு. பரராசசிங்கம், தலைவர் திரு. அ. தங்கத்துரை, இருகலை மாவட்டப் பிரதிநிதி திரு. ஆறுமுகநாதன் ஆகியோர் குப்பனித்தெரு தடுப்பு முகாமுக்குச் சென்று கைது செய்யப்பட்ட தொழிலாளர்களையும் சந்தி[illegible]

## தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு

—1-ம் பக்கத் தொடர்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்தும், கொழும்பு நீர்கொழும்பு, மலையகம் போன்ற பகுதிகளிலிருந்தும் 300க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் (DELEGATES) 14ம் திகதி மாலை நடைபெறும் அரசியல் மாநாட்டில் பங்கு பற்றுகிறார்கள்! இந்த மாநாட்டில் தான் கூட்டணியின் அதிமுக்கியமான அரசியல் தீர்மானமும், ஏனைய தீர்மானங்களும் எடுக்கப்படும்.

### விடயாலோசனை

14-5-76 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் மாநாட்டு விடயாலோசனைக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்திற்கு கூட்டணியின் தற்போதைய நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

### அரசியல் மாநாடு

அதே தினம் பிற்பகல் 4 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் தமிழர் கூட்டணியின் அரசியல் மாநாடு நடைபெறும். இம் மாநாட்டிலேயே கூட்டணியின் கடந்த கால நடவடிக்கைகள், ஆராயப்பட்டு, புதிய திட்டங்கள், தீர்மானங்கள், கொள்கைப் பிரகடனங்கள் உருவாக்கப்படவிருக்கிறது. இந்த மாநாட்டில் நாடெங்கிலுமிருந்து வரும் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். சூடாகவும் விறுவிறுப்புடனும் இந்த அரசியல் மாநாடு அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் மாநாட்டில் பிரதிநிதிகளாக கலந்து கொள்வோரில் பெரும்பாலோர் இளைஞர்களேயென்பது குறிப்பிடத்தக்கது.

### கலை நிகழ்ச்சி

அரசியல் மாநாட்டில் ஏற்படும் உஷ்ணத்தை தணிக்கும் பொருட்டு, இதை [illegible] கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். இப்பகுதியின்போ [illegible] கைகளை எடுக்கும் [illegible] நிகழ்ச்சிகளில் வில் லுப் பாட்டு, மெல்லிசை, நாடகங்கள் இடம்பெறுகின்றன. இக்கலை நிகழ்ச்சிகள் வழக்கம்பரை அம்மன் கோவில் வீதியில் 'மோகன் அரங்கில்' இடம்பெறுகிறது.

### மாதர் மாநாடு!

இரண்டாவது நாளாகிய 15-5-76 சனிக்கிழமை காலை 9மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் தமிழ் மகளிர் பேரவையின் மாநாடு நடைபெறவிருக்கிறது. இந்த மாநாட்டில், வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து வரும் மகளிர்பேரவை பிரதிநிதிகள் உரையாற்றுவார்கள். மகளிர் பேரவை மாநாட்டுக்கான ஏற்பாடுகளை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பூர்த்தி செய்துவிட்டார். மகளிர் பேரவை மாநாட்டு அரங்குக்கு வண்ணை ஆனந்தனின் அன்னையாரின் பெயர் சூட்டப்படும்.

### இளைஞர் மாநாடு

மகளிர் பேரவையின் மாநாட்டையடுத்து பிற்பகல் ஒரு மணிக்கு தமிழ் இளைஞர் பேரவையின் மாநாடு ஆரம்பமாகும். தமிழ இளைஞர் பேரவையின் மாநாட்டு அரங்குக்கு "தியாகி சிவகுமாரன் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்த மாநாட்டில் தமிழ் இளைஞர்பேரவைக் கிளைகளின் பிரதிநிதிகள் உரையாற்றுவதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்படும். சிறப்பு சொற்பொழிவாளர்களாக நாவலர் அமிர்தலிங்கமும் உடுப்பிட்டி சிவசிதம்பரமும் உரையாற்றுவர். இளைஞர் மாநாட்டுக்கான ஏற்பாடுகளை தமிழ் இளைஞர் பேரவையின் இடைக்கால அமைப்பாளர்களான இரகுபதிபால சிறீதரன், சு. க. மகேந்திரன், பீற்றர் பொன்கலன் ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

### பொதுக்கூட்டம்

இளைஞர் மாநாட்டையடுத்து, பொன்னாலைக் கடற்கரை மைதானத்தில் தமிழர் கூட்டணியின் இறுதிப் பொதுக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்துக்கு முன்னர் பண்ணாகம் மாநாட்டு அரங்கிலிருந்து பொன்னாலைக்கு ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கும் பொலிசாரிடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. பொன்னாலைப்பொதுக் கூட்டத்தில் தமிழர் கூட்டணித் தலைவர்கள், பா. உ.க்கள் அனைவரும் பேசுவார்கள். அரசியல் மாநாட்டுத் தீர்மானம் இப்பொதுக் கூட்டத்தில் பகிரங்கப்படுத்தப் படும். சுமார் 50 000 மக்கள் இக்கூட்டத்தில் திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வீட்டுத்தூய்மைக்கும், நுளம்பு, இலையான் தொல்லை நீங்க சிறந்த வழி!

மில்க்வைற் தயாரிப்பான

நீம் சுகாதார சோப் பாவிப்பதே

ஒரு பைக்கற் -/25 சதம் மட்டுமே,

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org